ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2114/18 - 2019 මාර්තු මස 13 වැනි බදාදා - 2019.03.13

*2114/18 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### கடுவல மாநகர சபை

*(267 ஆம் அத்தியாயமான) விநோத வரிக் கட்டளைச் சட்டம்*

**விநோத வரி அறவிடல் - கடுவல மாநகர சபை**

*கடுவல மாநகர சபையினால் 2018, ஒகத்து 03 ஆந் திகதியன்று நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் தீர்மான இல. 05 (1) (i) (අ) (02)/uq/0288 இன்கீழ், கீழே தரப்பட்டுள்ள பிரேரணை 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (267 ஆம் அத்தியாயமான) விநோத வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின்கீழ் மேல் மாகாண மாகாண சபையின் முதல் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி, பொருளாதார அபிவிருத்தி, மின் சக்தி மற்றும் வலு, சுற்றாடல் அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சருமான இசுரு தேவப்பிரிய ஆகிய என்னால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதென பொது மக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

இசுரு தேவப்பிரிய,
முதல் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி,
பொருளாதார அபிவிருத்தி, மின் சக்தி மற்றும் வலு, சுற்றாடல்
அலுவல்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு
மற்றும் சுற்றுலா அலுவல்கள் அமைச்சர்.

*2019, பெப்புருவரி 27.*

1A - PG 4422 — 35 (2019/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**தீர்மானம்**

*"(267 ஆம் அத்தியாயமான) விநோத வரிக் கட்டளைச் சட்டத்தின் அலுவல்களுக்கு உரித்தான ஏதேனும் விநோத அலுவலுக்காக கடுவல மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் நடாத்தும் எவரேனுமொருவர் அவ்விநோத அலுவலுக்காக-*

*(அ) திரைப்படக் காட்சியின்போது,*

*2019, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அதற்காக உட்பிரவேசிப்பவர்களிடமிருந்து அறவிடப்படும் பணத்தொகையின் நூற்றுக்கு ஏழு தசம் ஐந்து சதவீத (7.5%) இற்கு சமமான பணத்தொகையும் ;*

*(ஆ) சினிமா காட்சி அல்லாத ஏனைய விநோத அலுவல்களின்போது, அதற்காக உட்பிரவேசிப்பவர்களிடமிருந்து அறவிடப்படும் பணத்தொகையின் நூற்றுக்கு இருபத்தைந்து சதவீத (25%) இற்குச் சமமான பணத்தொகையும் ;*

*மேற்கூறப்பட்ட விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் கடுவல மாநகர சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், விநோத வரியாக அறவிடப்படல் வேண்டும் என கடுவல மாநகர சபை இத்தால் தீர்மானிக்கின்றது."*

*03-1272*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*